# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப. (ஓ).

முறையீட்டு மனு எண்: 374/2017/பே

ஆணை எண்: 152/2017

நாள்: 15/06/2017

**திரு. தி. காசி மணவாளன்,**
**51 சன்னதி தெரு,**
ஆழ்வார் திருநகரி,
தூத்துக்குடி மாவட்டம். — **முறையீட்டு மனுதாரர்**

**செயல் அலுவலர்**
ஆழ்வார் திருநகரி
தூத்துக்குடி மாவட்டம் — **எதிர் மனுதாரர்**

தூத்துக்குடி மாவட்டம், ஆழ்வார் திருநகரி, 51 சன்னதி தெருவைச் சேர்ந்த திரு. திகாசி மணவாளன் அவர்களின் 25.02.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.03.2017 அன்று பெறப்பட்டு 374/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரின் முறையீடு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தூத்துக்குடி மாவட்டம், ஆழ்வார் திருநகரி, 51 சன்னதி தெருவை சேர்ந்த திரு.தி. காசி மணவாளன் என்பவர் ஆழ்வார் திருநகரி பேரூராட்சி செயல் அலுவலர் மீது சில புகார்கள் கூறி முறையீட்டு மனுவை சமர்ப்பித்துள்ளார்,

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர் அவர்களுக்குத் தாக்கல் செய்யப்படும் முறையீட்டு மனுக்களை 2015ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் (குற்றச்சாட்டு தாக்கல், விசாரித்தல் மற்றும் முடித்தல்) விதிகளில் விதி 4ன்படி குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் கட்டணமாக ரூபாய் பத்துக்கான நீதிமன்ற வில்லையுடன் தாக்கல் செய்யப்பட வேண்டும். இம்முறைமன்ற நடுவ கடித எண்.374/2017/பே நாள்:31.3.2017ல் மேற்படி விவரங்கள் தெரிவிக்கப்பட்டு, உரிய படிவத்தில் உரிய முறையில் ரூ.10/-க்கான நீதிமன்ற முத்திரைக் கட்டணவில்லை ஒட்டி முறையீட்டு புகார்கள் அடங்கிய தனித்தொரு முறையீட்டு மனு இந்நாள்வரை பெறப்படவில்லை. மேற்குறிப்பிட்ட விதியின்படி மனுதாரர் முறையீட்டு மனுவினைத் தாக்கல் செய்யாததால் அவரது மனு குறைபாடான மனு என கருதப்பட்டு அவ்வாறே முடித்து வைத்து ஆணையிடப்படுகிறது.

2017ம் ஆண்டு ஜூன் திங்கள் 15-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்
திரு காசி மணவாளன்,
51 – சன்னதி தெரு,
ஆழ்வார் திருநகரி,
தூத்துக்குடி மாவட்டம்.